363
ARB 06/09/19

<u>ஒப்புகை இணைந்த பதிவஞ்சல் அட்டையுடன்</u>




அனுப்புநர் : N.திருவெங்கடாச்சலம்,
S/o.(**Late**).நாராயணசாமி,
**D.No:2/30,**கரைப்பாளையம்,
கொக்கம் பாளையம் -[Po.],
குண்டடம்-(Via), தாராபுரம் -[Tk.],
திருப்பூர்-[Dt.]- **638 702.**

பெறுநர் : உயர்திரு. "இளநிலை -பொறியாளர்" அவர்கள்,
பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்,
400/230 K.V மின் நிலையம்,
சென்னியாண்டவர் கோவில் எதிரில்,
கருமத்தம்பட்டி-(Po),
கோயமுத்துார்-**641 659.**

பொருள் : "தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005"-ன் கீழ் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், **கொக்கம்** பாளையம் கிராமத்தில், சர்வே எண்: ~~**436/3**~~ 472-ன் வழியாக **400 KV** புகளூர் **HVDC** மின் நிலையம் - அரசூர் இரட்டை சுற்று மின் பாதை செல்லும் வழியில் உள்ள தென்னை மரங்களை அகற்றி அதற்கான நஷ்ட ஈடு தருவது தொடர்பாக அதன் விபரம் வேண்டி கோரிக்கை மனு.

அய்யா,

மனுதாரர் ஆகிய நான் தங்களின் ஆளுகைக்கும், அதிகாரத்திற்குட்பட்ட மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கீழ்கண்ட விசயங்கள் குறித்த தகவல்கள் எனக்கு அவசர, அவசியமாக தேவைப்படுகிறது. தங்களின் ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்ட திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், **கொக்கம்** பாளையம் கிராமத்தில், சர்வே எண்: ~~**436/3**~~ 472-ன் வழியாக **400 KV** புகளூர் **HVDC** மின் நிலையம் -அரசூர் இரட்டை சுற்று மின் பாதை செல்லும் வழியில் உள்ள தென்னை மரங்களை அகற்றி அதற்கான நஷ்ட ஈடு தருவது தொடர்பாக அதன் விபரங்கள் தருமாறு

1. ஷ திட்டத்திற்கான "ப்ளூ பிரிண்ட்" ஒன்றினை சான்றிட்ட நகலாக தருமாறும்.
2. ஷ கிராமத்திற்குரிய கிராம புல வரைபடம் ஒன்றினை சான்றிட்ட நகலாக தருமாறும்.
3. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கை ந.க.எண்:18505/2018/C1 நாள்:11/01/2019-ன் கடிதத்தின் சான்றிட்ட நகலினை 1-னை தருமாறும்.
4. ஷ கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலங்களின் பட்டியல் ஒன்றினை சான்றிட்ட நகலாக தருமாறும்.
5. இத்திட்டத்திற்கான மாற்று வழித்தடம் ஏதேனும் கண்டறியப்பட்டு, பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதா என்பது குறித்து அதன் முழுமையான விவரங்களை சான்றிட்ட நகலாக 1-னை தருமாறும்.
6. ஷ திட்டம் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதன் பெயரில் எவ்விதமான உத்தரவுகள் தங்களுடைய அலுவலகத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறு இருப்பின் அதன் சான்றிட்ட நகலினை 1-னை தருமாறும்.
7. இத்திட்டத்திற்கான வழித்தடம் இந்து அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்டுள்ள நிலங்கள் வழியாக செல்வதற்கான வழிவகைகள் ஏதேனும் கண்டறியப்பட்டு, பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதா என்பது குறித்து அதன் முழுமையான விவரங்களை சான்றிட்ட நகலாக 1-னை தருமாறும்.
8. ஷ திட்டத்திம் தொடர்பாக மாவட்ட அரசிதழ் வெளியான பொது அறிவிப்பின் நகல் ஒன்றினை சான்றிட்ட நகலாக தருமாறும்.

ஆகவே, சமூகம் அவர்கள் இம்மனுவை ஏற்று மேற்கூறியுள்ள விசயங்கள் குறித்து அதற்கான தகவல்கள் அனைத்தும் 7 நாட்களுக்குள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன். ஏனெனில், தாங்கள் தரும் தகவல்கள் மற்றும் விவரங்கள் நீதிமன்ற பயன்பாட்டிற்கு உட்படுத்த வேண்டியுள்ளதால் உடன் வழங்குமாறு வேண்டுகிறேன். இம்மனுவிற்காக **"தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005"**-ன் கீழ் பரிசீலனை கட்டணமாக ரூ.10/-க்கான நீதிமன்ற முத்திரை வில்லை ஒட்டியுள்ளேன்.

இடம் : கொக்கம் பாளையம்
நாள் : 03.09.2019

ஒப்பம்,
N. Thiruvenkatachalam